தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2024

ஆண்டு: 7 திகதி: 22/06/2024

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி மங்கயற்கரசி விஜயகுமார்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பந்தியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள விடைகளுக்கு விடை எழுதுங்கள்**

”கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்” என்பது ஔவை மூதாட்டி நமக்கு அருளிய அறிவுரை.

இன்று தமிழர்களாகிய நாம், தமிழ்ப் பள்ளிக்கூடம் இல்லாத நாட்டிற்கு புலம்பெயர வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் பள்ளிக்கூடங்களை அமைத்து, தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

ஆஸ்திரேலியா ஒரு பல்லின கலாசார நாடு. உலகம் முழுவதிலுமிருந்து வந்து குடியேறிய மக்கள் தங்கள் தாய் மொழியை மறக்காமல் இருக்கவும், அடுத்த தலைமுறைக்குச் சொல்லிக்கொடுக்கவும் ஆஸ்திரேலிய அரசாங்கம் வழி வகுக்கிறது. 1987 ஆம் ஆண்டு, தேசிய மொழிக் கொள்கை அமுலுக்கு வந்தது. இதில் குறிப்பிட்டுள்ள முக்கிய அம்சங்கள் இரண்டு, ஒன்று ஆங்கிலம் அல்லாத மற்ற மொழிகளைக் காப்பாற்றி பேணி வளர்த்தல், மற்றொன்று இரண்டாவது மொழி கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் ஆகும்.

ஆஸ்திரேலியாவில் வாழும் அடுத்த தலைமுறையினர் தமிழை மறக்காமல் இருப்பதற்காக, ஆஸ்திரேலியாவில் முதல் தமிழ் பள்ளியாக 1977 ஆம் ஆண்டு “பாலர் மலர் தமிழ் பள்ளி” நியூ சௌத் வேல்ஸ் மாநிலத்தின் சிட்னி நகரில் தொடங்கப்பட்டது. பின்னர் 1979 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் விக்டோரியா மாநிலத்தின் மெல்பெர்ன் நகரில் தமிழ்ப் பள்ளியை தோற்றுவித்தார்கள். எமது தமிழ்க்கல்வி நிலையம் 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஆஸ்திரேலியாவின் மற்ற மாநிலங்களிலுள்ள பிரிஸ்பேன், அடிலெய்ட், கான்பரா, பெர்த் போன்ற நகரங்களிலும் தமிழ் பள்ளிகள் இயங்கி வருகிறது. எமது புலம் பெயர்ந்த தமிழர்கள், தமிழை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கச் சேவை செய்து வருகின்றனர்.

**பின்வரும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.**

1. "ஆஸ்திரேலியா ஒரு பல்லின கலாசார நாடு" என்று ஏன் அழைக்கப்படுகிறது?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

2. ஔவை மூதாட்டி நமக்கு அருளிய அறிவுரை என்ன?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

3. தேசிய மொழிக் கொள்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய இரு அம்சங்களும் எவை?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

4. சிட்னி நகரில் முதன் முதலில் நிறுவப்பட்ட தமிழ் பாடசாலை எது? எந்த ஆண்டு?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

5. ஆஸ்திரேலியாவில் எந்த மாநிலங்களில் தமிழ் பாடசாலைகள் இயங்கி வருகின்றன?

__________________________________________________

__________________________________________________

__________________________________________________

(5x4 = 20 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட சொற்களைக் கொண்டு, ஒத்த கருத்துச்சொற்களைக் கண்டு எழுதுங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| **உவகை** | **புத்தி** | **உறக்கம்** | **சீற்றம்** | **இடர்** |
| **வடிவு** | **வாய்மை** | **மெய்** | **புனிதம்** | **ஆகாரம்** |

1. அழகு : ________________
2. அறிவு : ________________
3. உடல் : ________________
4. உண்மை : ________________
5. களிப்பு : ________________
6. சினம் : ________________
7. சுத்தம் : ________________
8. துன்பம் : ________________
9. நித்திரை : ________________
10. உணவு : ________________

(10 x 1 = 10 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**சொற்களை முறையாக அமைத்து வாக்கியமாக எழுதுங்கள்.**

1. இடம் / தலைமுறையாக / முன்னோர்கள் / நம் / தலைமுறை / வாழ்ந்த / பூர்வீகம்

______________________________________________

______________________________________________

2. மண்ணை / புலம் / வேறு / விட்டுப் / பெயர்ந்து / நாடுகளில் / வசித்தல் / சொந்த

______________________________________________

______________________________________________

3. பெற்றார் / சோழ / குதிரை / நாட்டு / இளவரசி / முகத்தை

______________________________________________

______________________________________________

4. உள்ள / பாரதியார் / எட்டயபுரத்தில் / தமிழ்நாட்டில் / பிறந்தார் / மகாகவி

______________________________________________

______________________________________________

5. இளைஞர்கள் / பேணவும் / செய்கிறார்கள் / இன்று / தாய்மொழியை / தம் / பேசவும்

______________________________________________

______________________________________________

(5 x 3 = 15 புள்ளிகள்)

- BLANK PAGE -

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை வைத்து வசனம் எழுதுங்கள்.**

1. பூர்வீகம்

_______________________________________________

_______________________________________________

2. தொலைக்காட்சி

_______________________________________________

_______________________________________________

3. பெற்றோர்

_______________________________________________

_______________________________________________

4. கல்வி

_______________________________________________

_______________________________________________

5. கலைவிழா

_______________________________________________

_______________________________________________

(5 x 4 = 20 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**தமிழ்ப் பாடசாலையில் நடைபெறப்போகும் கலை விழாவுக்கு வரும்படி, இலங்கை அல்லது இந்தியாவில் வசிக்கின்ற உமது தாத்தா பாட்டிக்கு 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக.**

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிந்து 125 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுங்கள்.**

1. நீங்கள் கலந்து கொண்ட ஒரு பிறந்த நாள் விழா.
2. உங்கள் பூர்வீக பிரதேசத்திற்கு சென்ற பயண அனுபவத்தைப் பற்றி விபரித்து எழுதுக
3. உமது தமிழ்ப்பாடசாலை